முருகப்பெருமான் துணை

# மகான் திருப்பாணாழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.04.2023, செவ்வாய்கிழமை

1. தனிப்பெருங் கருணை வடிவான
   தயாபரனே ஞான வள்ளலே
   கனிவேலவன் மகா சூட்சும வடிவே
   கலியுக ஞானியே அண்ணலே
2. அண்ணலே உன் பெருமை கூறி
   அறிவிப்பேன் சுபகிருது சேல் திங்கள்
   நன்னயமாய் எழுநான்குதிகதி குசன்வாரம்
   (சுபகிருது வருடம் பங்குனி மாதம் 28 ம் நாள், 11.04.2023, செவ்வாய்கிழமை)
   நாட்டிடுவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை திருப்பாணாழ்வார் யானும்
   அரங்கன் படை வளர உரைப்பேன்
   வாசி வென்று கலியிலும் ஞானிகள்
   வலம்வர வழிகாட்டும் அரங்கன்
4. அரங்கன் தருமநெறி தனை
   அகிலம் ஏற்று வரவர
   வரங்கள் ஞான பலமாக
   வையகம் தன்னில் பெருகி
5. பெருகியே ஆன்றோர் சான்றோர்
   பெருமக்களென சாமானியரும்
   தருமபலத்தின் வழியில் வர
   தானவர்கள் நிலை உயர்ந்து
6. உயர்ந்து உண்மை உணர்வு
   உட்கலந்து ஜீவத்தயவாக
   தயாபரன் தணிகாசலன் ஆசிபட
   தன்னலமிலா சேவை ஆற்றி
7. ஆற்றி உலகோர் தானுமே
   அரங்கனால் ஞானம்கைகூடி
   மாற்றி சுவாச நிலைகளை
   மனஓட்டம் சகலதும் அடக்கி

8. அடக்கி ஆசாபாச ஆணவ
அழுக்குகள் அனைத்தும் விலக்கி
கடப்பரே அரங்கன் தேற்றுகின்ற
கருணைமிகுந்த ஞானிகளாக

9. ஆகவே அனைத்து சூட்சுமமும்
அனுக அனுக விளங்கி
மகான்கள் முழுமை பெற்றவர்கள்
மனதுள் வந்து ஒடுங்கும் வண்ணம்

10. வண்ணமுடன் சுத்த பரவெளி
வாயிலதும் திறவு கண்டிட
எண்ணம் மேன்மை கூடியே
எல்லாம் குருவடி நிழலேயென

11. என பரிபூரணத்துவம் கூடிட
இரண்டற பசுபதி நிலை ஆகி
ஞானவான்களாகி ஞானலோகம்
ஞானதேசிகன் துணைபட படைப்பர்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–